வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கு மழையை நம்பி வாழும் ஏழை எளிய மக்கள் இருக்கின்ற காரணத்தால் அரசு ஒரு நூற்பாலையைக் கட்டித் தந்தால் ஒரு ஆயிரம் பேருக்கு வேலை கிடைக்கும் என்பது என்னுடைய கருத்து. திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டம் ரொம்ப பின்தங்கிய மாவட்டம் என்ற அடிப்படையில் அந்த நூற்பாலையை உருவாக்குவதற்கு முதலமைச்சர் அவர்கள் உறுதுணையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கைலாசநாதர் கோவில் நத்தம் கோவில்பட்டியில் இருக்கிறது. அது புராதனக் கோவில். அது ரொம்ப பழுதடைந்த நிலையில் இருக்கிறது. பழனி முருகன் கோவில் பணத்தை எடுத்து இந்த கைலாசநாதர் கோவிலின் கோபுரங்களை புதுப்பித்து திருப்பணிக் குழுக்கள் திருத்தி அமைத்து அரசாங்கம் துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நத்தத்தில் ஒரு அரசினர் கலைக் கல்லூரி வேண்டும். உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளியில் படிக்கின்ற மாணவர்கள் ரொம்ப தூரத்திற்கு போக முடியாத சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால் நத்தத்தில் ஒரு அரசினர் கலைக் கல்லூரி கட்ட வேண்டும். அதைக் கட்டுவதற்கு கனம் முதலமைச்சரவர்கள் உறுதுணையாக இருக்க வேண்டுமென்று கேட்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 11-10]

6. ஒழுங்குப் பிரச்சினை.

அவையிலுள்ள மின்விளக்கு உடைந்ததால் எழுந்த ஒலி.

திரு. ஆர். சிங்காரம்: பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, சற்று நேரத்திற்கு முன்னதாக இந்த அவையிலே மர்மமான ஒரு சப்தம் கேட்டது. மேலேயிருந்து ஏதோ விழுந்தது. உடனே நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் வெளியே சென்றார்கள். அது என்ன விழுந்தது, ஏது விழுந்தது என்று புரியவில்லை. அதுபற்றி அவையிலே பேரவைத் துணைத் தலைவரவர்கள் அறிவிக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் அஞ்சுகின்ற அளவிற்கு ஒன்றும் நடந்துவிடவில்லை. பல்பு ஒன்று உடைந்துவிட்டது, அவ்வளவுதான், இது "point of order" அல்ல.